கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 305/2011**

திருமதி.ராமாத்தாள் (P.W –1) **20.1.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 13 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா எதற்காக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சொத்துக்கள் வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் என்னுடைய 19 வயதில் திருமணம் நடந்தது. தற்போது என்னுடைய வயது என்னவென்றால் 70க்கு மேல் இருக்கும். தாவா தாக்கல் செய்யும்போது என்னுடைய வயது 65 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி. தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் இறந்து போன எங்களுடைய தகப்பனாருக்கு வாரிசுதாரர்கள் என்று விளம்புகை செய்ய கோரி வழக்கு தாக்கம் செய்த விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு அடிப்படையில் போலியாக வருவாய் ஆவணங்கள் எங்கள் பெயரில் மாற்றம் செய்துள்ளோம் அதைப்பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய தகப்பனார் எப்போது எந்த தேதியில் இறந்து போனார் என்று தெரியுமா என்றால் தெரியாது மறந்துவிட்டேன். 2010 ஆம் வருடத்திற்கு முன்பு சொத்துக்களில் நான் சுவாதீனத்தில் இருந்தேன் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் தெரியவில்லை. தாவா சொத்து 2010 ஆம் வருடத்திற்கு முன்பு ஆவணங்கள் இல்லை. அதனால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்ல.

2. கணபதி கவுண்டர் தெரியுமா என்றால் தெரியாது. 1960 வருடம் ஏற்பட்ட நான்காம் பிரதிவாதி தகப்பனார் பெயரில் ஏற்பட்ட விவரங்கள் 2011 ஆம் வருடம் தான் எனக்கு தெரியவந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் தெரியவில்லை. 1960 ஆம் வருடம் ஏற்பட்ட கிரைய

ஆவணங்கள் செல்லாது என்று தற்சமயம் இந்த தாவாவின் மூலம் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல அந்த ஆவணங்கள் எங்களை கட்டுப்படுத்தாது என்று பரிகாரம் கூற முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் கூட்டு சுவாதீனத்தில் இருந்தேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து அதன் அடிப்படையில் தாவா பரிகாரங்களுக்கு சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்த தவறியுள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்து அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிப்படைகிறது என்றால் சரியல்ல. என்னுடைய மகன் பெயர் பொன்னுச்சாமி என்றால் சரி. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 19.5.2005 ம் தேதி தான செட்டில் மெண்ட் பத்திரத்தில் கடைசி பக்கத்தில் உள்ள புகைப்படத்தில் உள்ள நபர் நான் தான் என்றால் சரி.

3. வாரிசு கிரமப்படி தாவா சொத்தை பொறுத்து என்னுடைய மகன் பெயரில் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாரிசு விளம்புகை பரிகாரம் போலியாக பெற்றதால் தாவா சொத்தின் ஒரு பகுதியை தான செட்டில் மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியது செல்லாது 4 ம் பிரவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நானும் என்னுடைய மகனும் திருப்பூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 131/2006 இல் சுப்பிரமணியம் வகையறா மீது தாக்கல் செய்த வழக்கு விவரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நானும் என்னுடைய மகனும் மாண்புமிகு சென்னையில் நீதி மன்றத்தில் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு விவரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. அசல் வழக்கில் 131/2006 தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு நானும் என்னுடைய மகனும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிப்பேராணை மனுவில் இந்த வழக்கு வாபஸ் பெற்றுக் கொள்வதாக தெரிவித்து இருந்த விவரங்கள் பற்றிய எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆகையால் இந்த தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து 4 ம் பிரதிவாதி தந்தை பெயரில் கிரையம் ஏற்பட்ட தேதியில்

இருந்தும் அவருடைய இறப்பிற்கு பிறகு அவருடைய வாரிசுதாரர்கள் இருந்து வருவதால் தாவா சொத்தில் நான் எந்த ஒரு பாகமும் கோர அருகதை இல்லை என்றால் சரியல்ல. தாவா காலவரை தோஷத்தால் பாதிப்படைகிறது. அதனால் தாவா பிரதிவாதிகளின் செலவுக்கு உடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.தாவா சொத்தை பொறுத்து நானும் 1ம் பிரிதிவாதியும் மோசடி செய்து விட்டோம் என்பதால் சார்பதிவாளர் உட்பட எங்கள் மீது திருப்பூர் நான்காவது குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நடந்து வருவது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

18 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பில் எந்த முறையீடும் இல்லை. அழைத்து ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.01.20 18:37:33 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.